செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ்; தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்

# ‘எலைட்’ திட்ட வீரர் ப்ரித்வி சேகருக்கு இரண்டாம் இடம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்!



**சென்னை, பிப்.10-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் 2026 ஆடவர் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவுகளில் இரண்டாம் இடம் வென்ற தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் எலைட் திட்ட வீரர் ப்ரித்வி சேகர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.**

முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கி வருகின்றார். விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு அளித்து பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணி நியமனம் செய்து வருகின்றார்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை வழங்கும் (Elite) திட்டத்தின்கீழ் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை 25 இலட்சம் ரூபாயை 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தியதோடு இத்திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை 12 லிருந்து 50 ஆக உயர்த்தியுள்ளார்.

மேலும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் பெறுவதற்கான ஊக்குவிப்பு (MIMS) திட்டத்தின் கீழ் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்து நிதியுதவியை 10 இலட்சம் ரூபாயிலிருந்து இருந்து 12 இலட்சம் ரூபாயாக உயர்த்தியதோடு, தற்போது பயன்பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 125 ஆக உயர்த்தியுள்ளார்.

அதேபோல் சாம்பியன் டெவலப்மெண்ட் திட்டத்தின் (CDS) கீழ் பயன் பெறும் வயதிற்குட்பட்டோர் பிரிவு விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 100 லிருந்து 200 ஆக உயர்த்தியுள்ளார்.

மேலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளவும், வெளிநாடுகளுக்கு சென்று பயிற்சி பெறவும், அதிநவீன உயர்தர விளையாட்டு உபகரணங்களை வாங்கவும், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை உருவாக்கி நிதியுதவி அளித்து வருவதுடன், அவர்கள் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றால் உயரிய ஊக்கத்தொகையையும் வழங்கி வருகின்றார்.

இதன் காரணமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களும் சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் மற்றும் கோப்பைகளை வென்று சாதனை படைத்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்து வருகின்றனர்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை வழங்கும் (Elite) திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு பயன் பெற்று வரும் மாற்றுத்திறனாளி டென்னிஸ் வீரர் ப்ரித்வி சேகர் அவர்கள் ஆஸ்திரேலியா நாட்டின் மெல்பேர்ன் நகரில் கடந்த 30.1.2026 முதல் 1.2.2026 வரை நடைபெற்ற செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் பங்கேற்று, இரண்டாம் இடத்தை பிடித்தார்.

மேலும், செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் 2026 ஆடவர் இரட்டையர் பிரிவில் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த கபோர் மாதேவுடன் (GOBOR MATHE) இணைந்து விளையாடி இரட்டையர் பிரிவிலும் இரண்டாம் இடம் பிடித்தார்.

இவர் கடந்த 2024, 2025-ஆம் ஆண்டுகளில் செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (9.2.2026) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் எலைட் திட்ட (Elite Sportsperson Scheme) வீரர் ப்ரித்வி சேகர் சந்தித்து, செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் 2026 ஆடவர் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவுகளில் இரண்டாம் இடம் வென்றதற்கான பரிசுக் கோப்பைகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

சென்னை — பெங்களூரு

# விரைவுச் சாலைப் பணிகள் தாமதம் ஏன்?

## மக்களவையில் — தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.10-

“சென்னை - பெங்களூரு விரைவுச் சாலைப் பணிகள் தாமதம் ஏன்?” என்று மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் சாலைப்பணிகள் தொடர்பாக எழுப்பிய கேள்விகள் வருமாறு:

அதன் விபரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலை-48ன் திருப்பெரும்புதூர்-காரைப்பேட்டை வரையிலான 17 கி.மீ. நீள சாலையை ரூ.341 கோடி செலவில் ஆறு வழிச்சாலையாக மாற்றும் பணி, ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டதால் மீண்டும் மீண்டும் தாமதங்களைச் சந்தித்துள்ளதா?

சென்னை-பெங்களூரு விரைவுச்சாலையில், தமிழ்நாட்டில் உள்ள 106 கி.மீ. பகுதி, நிலம் கையகப்படுத்துதல், பயன்பாட்டுத் திட்டங்கள் மற்றும் ரெயில் பாதை இடமாற்றம் தொடர்பான சிக்கல்களால் பின்தங்கியுள்ளதா?

திருத்தப்பட்ட 2026 காலக்கெடுவுக்குள் இந்த 2 திட்டங்களையும் முடிப்பதை உறுதிசெய்ய இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

பாதிக்கப்பட்ட சாலைப்பகுதிகளைப் போதுமான அளவு பராமரிக்காதது போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகளுக்குக் காரணமாக அமைந்துள்ளதா?

சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தவும், சென்னை மற்றும் பெங்களூரு இடையேயான பயணத்தை எளிதாக்கவும் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு குறித்த விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் எழுப்பிய கேள்விகளுக்கு ஒன்றிய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்காரி எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார்.



அந்தப் பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

தேசிய நெடுஞ்சாலை-48ன் ஸ்ரீபெரும்புதூர் - காரைப்பேட்டைப் பிரிவை ஆறு வழிச்சாலையாக மாற்றும் பணி, தேசிய நெடுஞ்சாலை48ன் பூந்தமல்லிவாலாஜாபேட்டைப் பிரிவை ஆறு வழிச்சாலையாக மாற்றும் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2012ம் ஆண்டில் “கட்டுஇயக்குமாற்று” என்ற சுங்கச்சாவடி’ முறையில் தொடங்கப்பட்டது. ஆனால் சலுகையாளரின் தவறுகளால், சலுகை ஒப்பந்தம் 2016 ம் ஆண்டில் ரத்து செய்யப்பட்டது. மேலும் மீதமுள்ள பணிகள் 3 தனித்தனி தொகுப்புகளாக வழங்கப்பட்டன.

இபிசி முறையில் தொடங்கப்பட்ட திருபெரும்புதூர் - காரைப்பேட்டைப் பிரிவின் பணியானது, முக்கியமாக அனல் மின் நிலையங்களால் கட்டுமான தளத்துக்கு சாம்பல் உள்ளிட்டவை வழங்கப்படாததால் முடிக்க முடியவில்லை. ஏனெனில், இந்த சாம்பல், வாகன சுரங்கப்பாதைகள், பாதசாரி சுரங்கப் பாதைகள், மேம்பாலங்கள் போன்ற கடக்கும் கட்டமைப்புகளின் அணுகு சாலைகள் கட்டுமானத்துடன் தொடர்புடைய பணிகளின் ஒரு பகுதியான மண்மேடு அமைப்பதற்குத் தேவைப்பட்டது.

மொத்தமுள்ள 34 கி.மீல், 17.2 கி.மீ பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 16.8 கி.மீ தூரத்திற்கான பணிகள், புதிய ஒப்பந்தப்புள்ளி செயல்முறை மூலம் ரூ.341.50 கோடி செலவில் 7.11.2024 அன்று வழங்கப்பட்டுள்ளது. இப்பணி 27.1.2025 அன்று தொடங்கப்பட்டது. மேலும் அக்டோபர் 2026ல் முடிக்க திட்டமிடப்பட்டதில் இன்றுவரை 20 சதவீதம் பணிகள் நிறைவடைந்துள்ளன. திட்டத்தை திட்டமிட்டபடி முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெங்களூரு - சென்னை விரைவுச்சாலையின் மூன்றாம் கட்டப் பணிகள், 106 கி.மீ. (தமிழ்நாட்டில் 94 கி.மீ. மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் 12 கி.மீ.) நீளத்திற்கு, 4 தொகுப்புகளின் கீழ் கலப்பின ஆண்டுத் தொகை முறை ) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

பணியின் ஆரம்ப காலகட்டத்தில், நிலம் கையகப்படுத்துதல், பயன்பாட்டு வசதிகளை மாற்றுதல், குறிப்பாக அதி உயர் மின்னழுத்த கோடுகள், கோபுரங்கள், ரெயில்வே அனுமதி, வனத்துறை அனுமதி போன்ற சிக்கல்கள் இருந்தன. இந்த சிக்கல்கள் அனைத்தும் தீர்க்கப்பட்டுவிட்டன. மேலும் இன்று வரை அத்தகைய எந்தச் சிக்கலும் நிலுவையில் இல்லை.

மொத்தம் 4 தொகுப்புகளில், 3 தொகுப்புகளில் (80.2 கி.மீ.) பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் சுமார் 90 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும் ஜூலை 2026க்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மீதமுள்ள ஒரு தொகுதியில் (25.5 கி.மீ.) சலுகையாளரின் நிதி நெருக்கடி காரணமாக மே 2025 முதல் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. சலுகையாளரை மாற்றுவதற்கான செயல்முறை நடைபெற்று வருகிறது.

தற்போதுள்ள சாலை, போக்குவரத்துக்கேற்ற நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், பாலங்கள் மற்றும் பிற கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதால், பிரதான சாலையில் போக்குவரத்து சேவைச் சாலைகள் மற்றும் மாற்றுச் சாலைகள் வழியாகத் திருப்பி விடப்படுகிறது. இது போக்குவரத்துக்கு சிரமத்தை ஏற்படுத்துகிறது. போக்குவரத்து சீராகச் செல்வதற்காக, சேவைச் சாலையின் சில பகுதிகளில் புதிய தார் மேலடுக்கு ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், 6 வழிச்சாலை அமைக்கும் பணிகளுடன், அனைத்து முக்கிய சந்திப்புகளிலும் பொருத்தமான வாகன மேம்பாலங்கள், பாதசாரி மேம்பாலங்கள், தரை மட்டப் பிரிப்பான்கள் போன்றவை அமைக்கப்படுகின்றன. இது தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து செல்ல பாதசாரிகளுக்கும், வாகனங்களுக்கும் பாதுகாப்பான பயணத்தை எளிதாக்கும். தொடர் விபத்துகள் காரணமாக ‘பிளாக் ஸ்பாட்’ என அடையாளம் காணப்பட்ட இடங்களில், பொருத்தமான கடக்கும் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

---

ஆர்.லோகு தலைமை! கே.ஏழுமலை — கோ.சு.மணி முன்னிலை!

## 135வது வட்ட முன்னாள் துணைச் செயலாளர் குமார் படத்திறப்பு!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. — ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை,பிப்.10-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராய நகர் கிழக்கு பகுதி 135 வது வட்ட திமுக முன்னாள் துணைச் செயலாளரும் மகளிர் அணியில் பணியாற்றும் செல்வி அவர்களின் கணவரும் மகள் சரண்யா இளைஞரணியில் பணியாற்றும் கே. ராகுல்ராஜ், கே.கதிரவன் ஆகியோரின் தந்தையும் பழைய பாகம் 59 புதிய பாகம் 65 BLA-2 வாகப் பணியாற்றும் எஸ்.எம். பிரசாத்குமாரின் அண்ணன் எஸ். எஸ்.எம். குமார் கடந்த 26.01.2026 திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் இயற்கை எய்தினார்.

அதை முன்னிட்டு இன்று 10.02.2026 செவ்வாய்க்கிழமை மாலை 7 மணி அளவில் 135 வது வட்டம் அசோக் நகர் 30 வது தெரு, எண் :4/7 அவரது இல்லத்தில் மறைந்த எஸ். எம். குமார் திருவுருவப் படத்தை வட்ட பொறுப்பாளர் ஆர். லோகு அவர்கள் தலைமையில் உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினர் கோசு மணி பொதுக்குழு உறுப்பினர் ஜிடி அம்பேத்கர் ஆகியோர் முன்னிலையில் தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை .த .வேலு, தியாகராயநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ . கருணாநிதி ஆகியோர் திறந்து வைக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மேற்கு பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினர் கே.ஏழுமலை மற்றும் தியாகராய நகர் கிழக்கு மேற்கு பகுதி வட்ட செயலாளர்கள் மு. செல்வகுமார், மு.ம.செந்தில் குமார், வழக்கறிஞர் எம் .கே .மூர்த்தி ஜிபி செந்தில் குமார் ,ஆர் .சக்திவேல், வழக்கறிஞர், பி. லட்சுமி காந்தன் ,தட்சன் ஹரிஹரன், டி. கமல், ந.மோ முரளி, கே. எஸ்.வெல்டிங் ராஜா, பி.ஜெயக்குமார், பி.மாரி பகுதி துணை செயலாளர், வி.பி.எஸ் ஜெனார், அயலக அணி மாவட்ட தலைவர் எஸ். பாரதிராஜா ஆகியோர் கலந்து கொள்கின்றன எனவே 135 வது வட்டக் கழகத்தை சார்ந்த கிளைக் கழக இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாகத்தை சார்ந்த BLA2 நிர்வாகிகள் ஆற்றல் மிக்க செயல்வீரர்கள் வீராங்கனைகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி வட்ட பொறுப்பாளர் ஆர். லோகு கேட்டுக்கொள்கிறார்.

---


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மின்துறை**

மி.து.ந.க.எண்.தெற்கு / 0580,0581 / 2026

**மின் ஒப்ப அறிவிப்பு**

வைப்பு நிதி (CMRL) மண்டலம் - 11, வார்டு - 152, வளசரவாக்கம் ஆற்காடு சாலை திருவள்ளுவர் சாலை மெகா மார்ட் சந்திப்பில் இருந்து இந்திரா நகர் பிரதான சாலை சந்திப்பு வரை மற்றும் மருத்துவமனை சாலை சந்திப்பு வரை எல்.இ.டி, விளக்குகளுடன் கூடிய 119 எண்ணிக்கை 7/9.5 மீ உயர தெரு விளக்கு மின் கம்பங்கள் வழங்கி நிறுவும் பணிக்கு ஒப்பங்கள் மேற்பார்வை பொறியாளர் / மின் துறை அவர்களால் வரவேற்கப்படுகின்றன

**பணியின் மதிப்பு : ரூ.56,37,950/- ரூ 66,19,800/- முன் வைப்பு தொகை ரூ.56,400/- ரூ.66,200/- ஆகும் ஒப்பந்ததாரர்கள் https://tntenders.gov.in இணைய தளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் 27.02.2026 பிற்பகல் 2.15 மணிக்குள் பங்கேற்கலாம். 27.02.2026 பிற்பகல் 03.15 மணிக்கு ஒப்பங்கள் திறக்கப்படும்.**

செ.ம.தொ.இ / 843 / ஒப்பந்தப்புள்ளி / 2026

**மேற்பார்வை பொறியாளர் / மின் துறை**



**பெருநகர சென்னை மாநகராட்சி**

**பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு**

**(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் - 4, பகுதி - 1 விதி எண்.156 (1)ன் கீழ்)**

**2026ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18 ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு, மாநகராட்சி மன்ற கூடத்தில் மாமன்ற கூட்டம் நடைபெற உள்ளது.**

**இதில் பெருநகர சென்னை மாநகராட்சியின் 2026 - 2027 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட உள்ளது. தொடர்ந்து 20.02.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு வரவு - செலவு திட்டத்தின் மீது மன்றத்தில் விவாதம் நடைபெறும்.**

**விவாதத்திற்கு பின்னர் 2026 - 2027 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு திட்டத்திற்கான ஒப்புதல் அளிக்கப்படும். பின்னர் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட வேண்டிய பொருள்கள் எடுத்துக் கொள்ளப்படும்.**

**மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

செ.ம.தொ.இ / 161 / வரைகலை / 2026

**மேயர்**


---



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (09.02.2026) சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில், அரசு செவிலிய பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, செவிலிய மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்கள் வழங்கி விழா பேருரையாற்றினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணைவேந்தர் மரு.நாராயணசாமி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி ராஜகுமாரி, இணை இயக்குநர் மரு.சங்கர் சண்முகம் மற்றும் உயரலுவலர்கள், செவிலிய மாணவ, மாணவியர்கள், பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பிப். 12 அன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

# கொருக்குப்பேட்டையில் ரூ 96.04 கோடியில் புதிய மேம்பாலம்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆய்வு மேற்கொண்டார்!





*சென்னை,பிப்.10-*

முதலமைச்சர் அவர்களால் வருகின்ற 12.02.2026 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப் பேட்டையில் இரயில்வே 2பி சந்திக்கடவில் ரூபாய் 96.04 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தினை திறந்து வைக்கப்படவுள்ளதை முன்னிட்டு, முன்னேற்பாடுப் பணிகள் குறித்து இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (09.02.2026) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப்பேட்டையில் இரயில்வே 2ஏ சந்திக்கடவில் ரூபாய் 75 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்படவுள்ள பாலத்திற்கு அடிக்கல் நாட்டுவதை முன்னிட்டு, முன்னேற்பாடுப் பணிகள் குறித்து அமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின் போது மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே எபினேசர் (ஆர்.கே நகர்), ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன், மண்டல அலுவலர் ராஜ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

# BLA-2, BLC, BDA, BYO வாக்குச்சாவடி குழுவினர் பங்கேற்கும் “என் வாக்குச் சாவடி! வெற்றி வாக்குச் சாவடி” மாபெரும் பயிற்சி மாநாடு!

**திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் — அமைச்சர் ஆவடி சா.மு. நாசர்,**

**திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் — திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.,**

**திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் — வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ்**

## ஆகியோரின் கூட்டறிக்கை!







தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க நாளை பிப்ரவரி 11-ஆம் தேதி மாலை, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருவிடந்தையில் நடைபெறவுள்ள “என் வாக்குச் சாவடி! வெற்றி வாக்குச் சாவடி!” பயிற்சி மாநாட்டில், சென்னை மற்றும் விழுப்புரம் மண்டலத்தில் இருந்து 1,50,000-க்கும் மேற்பட்ட BLA-2, BLC, BDA, BYO ஆகிய வாக்குச்சாவடி குழுவினர் பங்கேற்கின்றனர், இம்மாநாட்டில் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் எழுச்சி உரையாற்ற உள்ளார்.

எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலின் முதல் தேர்தல் பரப்புரையாக அமையவுள்ள இம்மாநாட்டில் ஆவடி, பூவிருந்தவல்லி, திருத்தணி, திருவள்ளூர், பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட BLA-2, வாக்குச்சாவடி நிலைமுகவர்கள், BLC வாக்குச்சாவடி பணிக்குழு உறுப்பினர்கள், BYO-வாக்குச்சாவடி இளைஞர் அணி, BDA-வாக்குச்சாவடி தகவல் தொழில்நுட்ப அணி உள்ளிட்ட வாக்குச்சாவடி குழுவினர் பங்கேற்க உள்ளனர்.

இம்மாநாட்டில் திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு மற்றும் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர் - திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

**திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

**வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ்**
பொறுப்பாளர் - திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---



சென்னை, தியாகராய நகரில் நேற்று (09.02.2026) நடைபெற்ற, கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் கொத்தடிமைத் தொழிலாளர் மீட்பு பணியில் சிறப்பாக பணிபுரிந்த கடலூர் மாவட்டம், சிதம்பரம் சார் ஆட்சியர் கிஷன் குமாருக்கு கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ.வீர ராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன், கூடுதல் தொழிலாளர் ஆணையர் நிர்வாகம்) திருமதி சி.ஹேமலதா மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.